# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.நு.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093649

1. District மாவட்டம் : நாமக்கல் PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு நாமக்கல் Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 01/AC/2021 Date நாள்: 07.01.2021

2. (i) Act சட்டம்: The P.C. Act.1988 as amended Sections பிரிவுகள்: 7 and 7A
(ii) Act சட்டம்: by the Prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 06.01.2021 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period நேர அளவு : மாலை 18.00 மணி முதல் Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.01.2021 Time நேரம் : காலை 09.00 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-I 07.01.2021 Time நேரம் : காலை 09.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக திடீர் தணிக்கையின் போது கிடைக்கப் பெற்ற தகவலின் மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 37 கி.மீ மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு மற்றும் ஸ்ரீ சக்தி புகை பரிசோதனை நிலையம் முன்புறம், திருச்செங்கோடு.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.தி. ஜெயக்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அ. தியாகராஜன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05-06-1973 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. M. செந்தில்குமார் த/பெ. முத்துசாமி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் மற்றும் 3 நபர்கள் (விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91 நாள் 07.01.2021-ன் [illegible] அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு வழக்கு ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருத்து (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது.

விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused investigation / transferred to PS ........................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குறித்த முறையீட்டின் உள்ளடக்கம் பிரிவு 2ல் குறிப்பிடப்பட்ட பிரிவுகளின்படி குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்பட்டது [illegible] பதவி [illegible] பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையை காட்டி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டப்பட்டு, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் கையொப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் கையொப்பம்
[illegible] 7.01.2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

07.01.2021 காலை 10.30 மணிக்கு

Name: பெயர் A.T. [illegible]
Rank: நிலை ........................ No. எண் ........................
[illegible]
[illegible], நாமக்கல்.

* GCP-240-34(Type 2) 60,000 Cps -21 3 [illegible] 12)p 2
B. [illegible]

**<u>நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 01/AC/2021, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,</u>**

<u>எதிரிகளின் பட்டியல்</u>

1. திரு.M.செந்தில்குமார், த/பெ. முத்துசாமி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

2. திரு.N.செந்தில்குமார், த/பெ.நடராஜன், கதவு எண்.1/427 எஸ்.கே.பி. நகர், ஆண்டிபாளையம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். (தனியர்)

3. திரு.A.ஈஸ்வரமூர்த்தி, த/பெ.அங்கமுத்து, கதவு எண்.165 எட்டிமடைபுதூர், கைலாசம்பாளையம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். (தனியர்)

4. திரு.K.B.சந்தானம், த/பெ.பாலன், கதவு எண்.125/57 அண்ணா தெரு, நரிப்பள்ளம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் (தனியர்).

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.01/AC/2021, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:**

- - -

சமர்ப்பிக்கப்படுகிறது:

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 06.01.2021-ஆம் தேதி புதன்கிழமை மாலை 18.15 மணி முதல் இரவு 23.00 மணி வரை நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, வரகூராம்பட்டி கிராமம், திருச்செங்கோடு To ஈரோடு செல்லும் ரோட்டில் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் மேற்குபுறம் உள்ள ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலையம் முன்புறம் செய்த திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 07.01.2021-ஆம் தேதி காலை 09.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 01/AC/2021, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I ஆக பணிபுரிந்துவரும் திரு.M.செந்தில்குமார் அவர்கள் புதிய வாகனப்பதிவு, புதிய பழகுநர் உரிமம் அளித்தல், ஓட்டுநர் உரிமம் அளித்தல், வாகன உரிமையாளர் பெயர் மாற்றம், வாகனத்தின் பதிவு முகவரி மாற்றம், வாகன ஆண்டு புதுப்பித்தல் சான்று வழங்குதல் போன்ற காரணங்களுக்காக அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து பொதுமக்கள், புரோக்கர்கள், பயிற்சிபள்ளி உரிமையாளர்கள் மற்றும் தனியர்களிடமிருந்து 06.01.2021-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் அடிப்படையில் மாலை 17.00 மணிக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான், அரசு சாட்சிகள் 1) திரு.ந.அரவிந்தன்,

அலுவலக மேலாளர் (நீதியியல்), மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், நாமக்கல், 2) திரு.ம.ஜெயப்பிரகாஷ், வருவாய் ஆய்வாளர், நல்லிபாளையம் குறுவட்டம், நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் அரசு வாகனம் TN 21 G 0641-இல் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, வரகூராம்பட்டியில் செயல்பட்டு வரும் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகம் அருகில் மாலை 18.00 மணிக்கு சென்று சேர்ந்தேன். அப்போது மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.செந்தில்குமார் என்பவர் அவரது TN 34 H 3899 பதிவெண் கொண்ட மாருதி ஆல்டோ காரில் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு சென்றார். அப்போது பொதுமக்கள், தனியர்கள் மற்றும் பயிற்சிபள்ளி உரிமையாளர்கள் ஆகியோர்களிடமிருந்து கையூட்டாக புரோக்கர்கள் மூலம் பெற்ற பணத்தை ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலையம் வரச்சொல்லி அவர்களிடமிருந்து கையூட்டு பணத்தை பெற்றுக் கொள்ளப்போவதாக கிடைத்த தகவலின்படி அவரது மாருதி ஆல்டோ காரை பின் தொடர்ந்து செல்லப்பட்டது. மாலை சுமார் 18.10 மணிக்கு அவர் திருச்செங்கோடு To ஈரோடு செல்லும் மெயின்ரோட்டில் இடது புறம் உள்ள ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் மேற்புறம் உள்ள ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலையம் முன்புறம் சென்று அவரது காரை நிறுத்தினார். அப்போது நான்கு நபர்கள் அவரிடம் வந்தனர். அதில் ஒருவர் இருசக்கர வாகனத்தில் இருந்து சில பேப்பர்களை எடுத்து மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கொடுத்தார். அவர் தனது சட்டை பாக்கட்டில் இருந்த பேனாவை எடுத்து அதை பார்வையிட்டு ஏதோ எழுதினார். மோட்டார் வாகன ஆய்வாளர் வெள்ளை நிற அரைக்கை சட்டையும், காக்கி நிறத்தில் பேண்ட்டும், பிரவுன் நிற ஷூவும் அணிந்திருந்தார். அப்போது அங்கிருந்த நபர்கள் கையில் கோப்புகள் மற்றும் பணத்துடன் பிளாஸ்டிக் டப்பாவுடன் நின்று கொண்டிருந்தனர். அப்போது நான், வெள்ளை நிற அரைக்கை சட்டை, காக்கி நிறத்தில் பேண்ட், பிரவுன் நிற ஷூவும் அணிந்து நின்று கொண்டிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் சென்று, எனது அடையாள அட்டையை காண்பித்து என்னை அறிமுகம் செய்து கொண்டு உடன்

வந்ததிருந்த இரண்டு அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து, திடீர் தணிக்கை செய்ய வந்த விபரம் பற்றி அவரிடம் தெரிவித்து திடீர் தணிக்கை மேற்கொண்டேன். மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் M.செந்தில்குமார் என்றும், தான் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக கடந்த 03.07.2019-ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவரை விசாரணை செய்தபோது, ஸ்ரீசாஸ்தா வாகன புகை பரிசோதனை நிலையம், தனது அப்பா திரு.முத்துசாமி பெயரில் உள்ள இந்த இடத்தில் அமைந்துள்ளதாக தெரிவித்தார். மேலும் 2004-ம் வருடம் முதல் 2012-ஆம் வருடம் வரை அந்த புகை பரிசோதனை நிலையத்தை தான் நடத்தி வந்ததாகவும், பின்னர் கடந்த 2013-ஆம் வருடம் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2 ஆக அரசுப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அரசு சாட்சிகள் உதவியுடன் அவரை சோதனையிட்டதில், அவரின் சட்டையின் இடது மேல் வெளிப்பாக்கட்டில் சிவப்பு நிற பந்து முனை பேனா இரண்டு இருந்தது. அது அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரிடம் பணமோ, வேறு பொருளோ ஏதும் இல்லை. பின்னர் அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் N.செந்தில்குமார், த/பெ.நடராஜன், கதவு எண்.1/427 எஸ்.கே.பி. நகர், ஆண்டிபாளையம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்றும், தான் ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலையத்தின் சக உரிமையாளர் என்றும், தானும் எட்டிமடைப்புதூரைச் சேர்ந்த திரு.A.ஈஸ்வரமூர்த்தி என்பரும் கூட்டாக சேர்ந்து வாகன புகை பரிசோதனை நிலையத்தை நடத்தி வருவதாகவும் தெரிவித்தார். மேலும் திரு.N.செந்தில்குமார் கையில் வைத்திருந்த கோப்புகளை அரசு சாட்சிகள் உதவியுடன் பெற்று பார்வையிட்டதில், 1) TN 34 P 9590 (12 பக்கங்கள்), 2) TN 81 W 6771 (76 பக்கங்கள்) மற்றும் 3) TN 34 J 2471 (12 பக்கங்கள்) ஆகிய வாகனங்களின் வகை மாற்றத்திற்கான விண்ணப்ப படிவத்துடன் உள்ள கோப்புகள், 4) TN 34 AB 0009 (10 பக்கங்கள்), 5) TN 34 AB 6592 (8 பக்கங்கள்),

6) TN 34 J 0760 (10 பக்கங்கள்) மற்றும் 7) TN 34 H 0371 (16 பக்கங்கள்) ஆகிய வாகனங்களின் தவணைக் கொள்முதல் இரத்து செய்வதற்கான விண்ணப்ப படிவம் 35 உடன் உள்ள கோப்புகள், 8) TN 20 AL 6386 (14 பக்கங்கள்) , 9) TN 88 Z 1278 (12 பக்கங்கள்), 10) TN 33 BQ 6361 (16 பக்கங்கள்) மற்றும் 11) TN 28 AR 4216 (16 பக்கங்கள்) ஆகிய வாகனங்களின் உரிமை மாற்றத்திற்கான விண்ணப்ப படிவம் 29 உடன் கூடிய கோப்புகள், 12) TN 27 V 7717 (8 பக்கங்கள்) என்ற வாகனத்தின் பதிவு சான்று புதுப்பித்தல் விண்ணப்ப படிவம் 25 உடன் கூடிய கோப்பு, 13) TN 52 Q 0163 (16 பக்கங்கள்) என்ற வாகனத்தின் நேஷனல் பர்மிட் பெறுவதற்கான விண்ணப்ப படிவம் 48 உடன் கூடிய கோப்பு, 14) TN 34 AC 6043 (16 பக்கங்கள்) என்ற வாகனத்தின் நேஷனல் பர்மிட் வரி செலுத்துவதற்கான விண்ணப்ப படிவம் 46 உடன் கூடிய கோப்பு, 15) TN 48 T 0711 (14 பக்கங்கள்) என்ற வாகனத்தின் ஆட்சேபனை இல்லா சான்று (NOC) வழங்குவதற்கான விண்ணப்ப படிவம் 28 உடன் கூடிய கோப்பு ஆகியவைகள் இருந்தன. மேற்படி கோப்புகளில் திருச்செங்கோடு வட்டார போக்குவரத்து அலுவலக கண்காணிப்பாளர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் சம்பந்தப்பட்ட பக்கங்களில் கையெழுத்து செய்துள்ளனர். இது குறித்து திரு.N.செந்தில்குமார் அவர்களிடம் கேட்டபோது, இக்கோப்புகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் பார்வையிடப்பட்டு, கையெழுத்து செய்யப்பட்டு Online-இல் அப்ரூவல் செய்யப்பட்டுவிட்டது என்றும், இதற்கான உத்தரவுகளை RTO அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட இருக்கைகளில் பெற்றுக்கொண்டபின் RTO அலுவலக தபால் செக்சனில் ஒப்படைத்துவிடுவேன் என்றும், மேற்படி கோப்புகள் RTO அலுவலத்தில் தான் இருக்க வேண்டும் என்றும், தான் இக்கோப்புகளை உத்தரவு பெறுவதற்கு வசதியாக வாங்கி வைத்துள்ளதாக தெரிவித்தார். மேற்படி கோப்புகளின் அசல் வழக்கின் தொடர் விசாரணைக்காக நான் அப்போது தயார் செய்து கொண்டிருந்த செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட்டதில், அவரது வலது

பக்க பேண்டின் முன் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை இரண்டு மடிப்புகளுடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்பில் ரூ.10,000/- (Rs.500 X 20) இருந்தது, மற்றொரு மடிப்பில் ரூ.4,200/- (Rs.500 X 8, 100 x 2) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் புகை பரிசோதனை நிலைய செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி தொகை ரூ.14,200/- தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவர் தனது சட்டையின் இடதுபக்க மேல்வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.400/- (Rs.100 X 4) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் சொந்த செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி தொகை ரூ.400/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் A.ஈஸ்வரமூர்த்தி, த/பெ.அங்கமுத்து, கதவு எண்.165 எட்டிமடைபுதூர், கைலாசம்பாளையம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்றும், தான் ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலையத்தின் சக உரிமையாளர் என்றும், தானும் ஆண்டிபாளையத்தைச் சேர்ந்த திரு.N.செந்தில்குமார் என்பரும் கூட்டாக சேர்ந்து வாகன புகை பரிசோதனை நிலையத்தை நடத்தி வருவதாகவும் தெரிவித்தார். அவரது கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக் டப்பா வைத்திருந்தார். அரசு சாட்சிகள் உதவியுடன் அதனை பெற்று சோதனையிட்டதில், அதில் 17 மடிப்புகளாக பணம் இருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்த்ததில் 1) ரூ.1,000/- (Rs.500 X 2), 2) ரூ.3,000/- (Rs.500 X 6), 3) ரூ.1,000/- (Rs.500 X 2), 4) ரூ.5,500/- (Rs.500 X 11), 5) ரூ.1,000/- (Rs.500 X 2), 6) ரூ.500/- (Rs.500 X 1), 7) ரூ.3,500/- (Rs.2000 X 1, 500 x 3), 8) ரூ.4,000/- (Rs.500 X 8), 9) ரூ.1,500/- (Rs.500 X 3), 10) ரூ.2,500/- (Rs.500 X 2, 200 x 5, 100 x 5), 11) ரூ.1,500/- (Rs.500 X 2, 200 x 2, 20 x 3, 10 x 4), 12) ரூ.1,000/- (Rs.500 X 2), 13)

ரூ.1,500/- (500 x 3), 14) ரூ.1,000/- (Rs.500 X 2), 15) ரூ.2,500/- (Rs.500 X 5), 16) ரூ.1,000/- (Rs.200 X 5), 17) ரூ.1,000/- (Rs.500 X 2) என்று இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் புகை பரிசோதனை நிலைய செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி தொகை மொத்தம் ரூ.33,000/- தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அந்த பிளாஸ்டிக் டப்பாவில் இரண்டு வெள்ளைத்தாள்கள் மடிப்புடன் இருந்தது. அதை அரசு சாட்சிகள் உதவியுடன் பார்வையிட்டதில் ஒரு வெள்ளைத்தாளில் நீல நிற பேனாவினால் 6.1.21 என்று தேதி எழுதப்பட்டும், வரிசையாக 13 பெயர்களும் அவற்றிற்கு எதிரில் தொகைகளும் கைப்பட எழுதப்பட்டிருந்தது. அதில் முதலாவதாக காவ்யா-1000, இறுதியாக கோகுல்-1000 என்றும், 12-வதாக உள்ள ஆண்டவர் - 1000 என்பது அடிக்கப்பட்டும் உள்ளது. மற்றொரு வெள்ளைத்தாளில் நீல நிற பேனாவினால் 6.1.21 என்று தேதி எழுதப்பட்டும், அதன் வலது ஓரத்தில் வரிசையாக 7 பெயர்களும் அவற்றிற்கு எதிரில் தொகைகளும் கைப்பட எழுதப்பட்டிருந்தது. அதில் முதலாவதாக சேகர் - 1500, இறுதியாக Munna-1000 என்று உள்ளது. மேற்படி வெள்ளைத்தாள்களில் எழுதப்பட்டுள்ள விபரம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் புகை பரிசோதனை நிலைய செலவுகளை எழுதி வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி இரண்டு வெள்ளைத்தாள்களில் நானும், இரண்டு அரசு சாட்சிகளும் பார்வையிட்டதற்கு அடையாளமாக கையொப்பம் செய்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.செந்தில்குமார் மற்றும் தனியர் திரு.A.ஈஸ்வரமூர்த்தி அவர்களிடமும் கையொப்பம் பெற்று அவைகள் தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரை சோதனையிட்டதில், அவர் தனது சட்டையின் இடதுபக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார்.

அதில் ரூ.230/- (Rs.100 X 2, 10 X 3) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் சொந்த செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அந்தப் பணம் ரூ.230/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் தனது பேன்ட்டின் இடதுபக்க முன் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் அதில் ரூ.3,100/- (Rs.200 x 12, 100 x 5, 20 x 1, 10 X 18) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் இன்று 06.01.2021-ம் தேதி Emission test-க்கு வசூல் செய்யப்பட்டது என்று சொன்னார். அதற்கு ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்று கேட்டபோது, அவரது வாகன புகை பரிசோதனை நிலையத்தில் உள்ள பதிவேடு ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 06.01.2021-ம் தேதி 28 வாகனங்களுக்கு மொத்தம் ரூபாய் 3,100/- வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் உள்ளது. அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அந்தப் பணம் ரூ.3,100/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த பதிவேட்டினை பார்வையிட்டதற்கு அடையாளமாக அதில் நானும், அரசு சாட்சிகள் கையொப்பம் செய்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.செந்தில்குமார் மற்றும் தனியர் திரு.A.ஈஸ்வரமூர்த்தி ஆகியோர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. அப்பதிவேட்டினை தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றிக்கொண்டேன். அங்கிருந்த மற்றொரு நபரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் K.B.சந்தானம், த/பெ.பாலன், கதவு எண்.125/57 அண்ணா தெரு, நரிப்பள்ளம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்றும், தான் திருச்செங்கோட்டில் இயங்கி வரும் திரு.முரளிதரன், திரு.கோபால் ஆகியோருக்கு சொந்தமான சபரி டிரைவிங் ஸ்கூலில் வேலை செய்து வருவதாகவும், தான் இன்று TN 82 Z 7986 என்ற சரக்கு லாரி வாகனத்திற்கு Fitness Certificate-ஐ புதுப்பிப்பதற்கான கோப்பில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் கையெழுத்து பெற வந்ததாகவும், அந்த

கோப்பில் தற்பொழுதுதான் கையெழுத்து பெற்று வைத்துள்ளதாக சொல்லி தனது TN 34 AC 2226 என்ற Hero Deluxe இருசக்கர வாகனத்தின் முன் சீட் கவரில் இருந்து ஒரு கோப்பை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கோப்பை அரசு சாட்சிகள் உதவியுடன் பெற்று பார்வையிட்டதில், TN 82 Z 7986 என்ற பதிவெண் கொண்ட சரக்கு வாகனத்திற்கு Fitness Certificate-ஐ புதுப்பிப்பதற்கான விண்ணப்ப படிவங்களுடன் பணம் செலுத்தியதற்கான ரசீது மற்றும் Certificate of Fitness இரண்டும் இருந்தன. அதில் பணம் செலுத்தியதற்கான இரசீது மற்றும் Certificate of Fitness இரண்டிலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.செந்தில்குமார் அவர்கள் சிகப்பு நிற மையினால் கையெழுத்து செய்து 6.1.2021 என்று தேதியிட்டுள்ளார். திரு.K.B.சந்தானம் அவர்களிடம் இது குறித்து விசாரிக்க, TN 82 Z 7986 என்ற சரக்கு வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் இன்று மாலை வாகன சோதனைக்கான திருச்செங்கோடு RTO அலுவலகத்திற்கான வளாகத்தில் வைத்து பார்வையிட்டு அவரது Tab கணினி மூலம் அவ்விபரத்தை அப்லோட் செய்துவிட்டார் என்றும், தான் திருச்செங்கோடு RTO அலுவலகம் சென்று Certificate of Fitness-ஐ பிரின்ட் எடுத்துக்கொண்டு வந்து, அதில் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கையெழுத்து பெற்றதாகவும், மேலும் Certificate of Fitness-இன் ஒரு பிரதியை வாகன உரிமையாளருக்கு கொடுத்துவிடுவேன் என்றும், கோப்பை RTO அலுவலக தபால் செக்சனில் ஒப்படைத்துவிடுவேன் என்றும் தெரிவித்தார். மொத்தம் 26 பக்கங்கள் கொண்ட அக்கோப்பை தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரது இருசக்கர வாகனத்தின் முன்புற சீட் கவரை சோதனையிட்டதில், அதில் புதிய ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் வாகன பதிவு சான்று அட்டைகள் ஆகியவைகள் இருந்தன. அவற்றை அரசு சாட்சிகள் உதவியுடன் பார்வையிட்டதில் 1) TN 34 X 6377, 2) TN 34 L 4345, 3) TN 88 B 9294, 4) TN 52 H 9227 ஆகிய வாகனங்களின் அசல் பதிவுச்சான்று Smart Card களும் 5) TN34 20210000032, 6) TN34 20210000033, 7) TN34 20210000009, 8) TN34

20200004626, 9) TN34 20210000001, 10) TN34 20210000002, 11) TN34 20210000003, 12) TN34 20210000004, 13) TN34 20210000005, 14) TN34 20210000010, 15) TN34 20210000011, 16) TN34 20210000012, 17) TN34 20210000031, 18) TN34 20210000040, 19) TN34 20210000045 மற்றும் 20) TN34 20160005557 ஆகிய ஓட்டுநர் உரிமங்களின் அசல்கள் இருந்தன. இது குறித்து திரு.K.B.சந்தானம் அவர்களிடம் கேட்க, அவர் இன்று அதை திருச்செங்கோடு RTO அலுவலகத்தில் இருந்து பெற்று வந்ததாகவும், அதை உரியவர்களிடம் ஒப்படைக்க வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி வாகன பதிவுசான்று மற்றும் ஓட்டுநர் உரிமங்களின் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு அதில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.செந்தில்குமார் அவர்களிடமும், தனியர் திரு.K.B.சந்தானம் அவர்களிடமும் கையொப்பம் பெறப்பட்டு, தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். அந்த புதிய ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் வாகன பதிவுசான்று ஆகியவற்றின் அசல்கள் திரு.K.B.சந்தானம் வசமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட்டதில், அவர் தனது சட்டையின் இடதுபக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.3,900/- (Rs.100 X 39) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் அந்த தொகை ரூ.3,900/-ஐ தொடர் விசாரணைக்காக நான் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றிக் கொண்டேன். அங்கிருந்த மற்றொரு நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் M.பூவரசன், த/பெ.முருகன், கதவு எண்.73/5 எட்டிமடைப்புதூர், கைலாசம்பாளையம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்றும், தான் ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலையத்தில் கடந்த 6 மாதமாக வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட்டதில், அவரிடம்

பணமோ, பொருளோ எதுவும் இல்லை. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரையும், அரசு சாட்சிகளையும் அழைத்துக் கொண்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரின் TN 34 H 3899 பதிவெண் கொண்ட மாருதி ஆல்டோ கார் சோதனையிடப்பட்டது. அந்த வாகனத்தை சோதனையிட்டதில் அதில் கைப்பற்றக்கூடிய பணமோ, பொருளோ இல்லை. பின்னர் அரசு சாட்சிகள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோரை அழைத்து கொண்டு ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலையத்தின் முன்புறம் வரப்பட்டது. போதிய வெளிச்சமின்மை இல்லாத காரணத்தாலும், இரவு நேரம் என்பதாலும், ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலைய அறையில் வைத்து செயல்முறை நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டது. ஸ்ரீசாஸ்தா புகை பரிசோதனை நிலையமானது திருச்செங்கோடு to ஈரோடு செல்லும் சாலையில் தெற்கே ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் மேற்புறம் வடக்கு பார்த்தவாறு மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.M.செந்தில்குமார் அவர்களின் தந்தை திரு.முத்துசாமி என்பவருக்கு சொந்தமான சுமார் 10 x 8 அடிகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் சீட் போடப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதன் முன்புறம் எவ்வித தடுப்புகளும் இல்லாமல் வாகனங்கள் நிறுத்துவதற்கு வசதியாக இடம் காலியாக உள்ளது. திடீர் தணிக்கை 06.01.2021-ம் தேதி இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின்போது மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் புரோக்கர்கள்/தனியர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். மேலும் அங்குள்ள வாகனங்கள் மற்றும் உடைமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்து கொள்ளப்பட்டது. மேலும் தமிழக அரசின் உத்திரவுபடி கோவிட்-19 கொரோனா நோய் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் முழுமையாக கடைபிடிக்கப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட தனியர்கள் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மோட்டார்

வாகன ஆய்வாளர் தனியர்களுக்கு அனுகூலமாக அலுவல் வேலைகளை செய்து கொடுப்பதற்காக அவை முறையற்ற வழிகளில் தனியர்களிடமிருந்து பிரதிபலனாக பெறப்படக்கூடிய பணமாக இருக்கக்கூடும் என்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், மேலும் தனியர்கள் தங்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக வாகன உரிமையாளர்கள்/பொதுமக்களிடமிருந்து பணத்தை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்கு கொண்டு வந்து இருக்கக்கூடும் என்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி ஒப்புதல் பெற்று, மேற்படி எதிரிகள் மீது இன்று 07.01.2021-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 01/AC/2021, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் ஆகியவற்றை கனம் நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

07.01.2021

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.